# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2011 -2012

# வளர் தமிழ் 8

சுட்டெண்:........................................................ நேரம்: 150 மணித்துளிகள்

**1) வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடியிடுக.**

1. உலகின் முதல் மொழி தமிழே என்று நிறுவியவர்
அ) விபுலாநந்த அடிகள்   ஆ) தொல்காப்பியர்
இ) தேவநேயப்பாவாணர்   ஈ) தனிநாயகம் அடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா
அ) வெள்ளிவிழா   ஆ) பவளவிழா   இ) பொன்விழா   ஈ) வைரவிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. செயப்படுபொருள் குன்றிய வினைக்கு எடுத்துக் காட்டு
அ) ஆடினான்   ஆ) பாடினான்   இ) எழுதினான்   ஈ) ஓடினான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. பாண்டாரவன்னியன் வீரச்சாவு அடைந்த ஆண்டு
அ) 1803   ஆ) 1785   இ) 1811   ஈ) 1878

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. பொருள் முற்றுப்பெற்ற சொற்றொடர் இவ்வாறு அழைக்கப்படுகிறது
அ) சொற்றொடர்   ஆ) பகுசொல்   இ) சொல்லியம்   ஈ) தொடர்மொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. சொல்லியத்தில் இடம்பெறும் எழுவாய், செயப்படுபொருள் என்பன

அ) பெயர்ச்சொற்கள் ஆ) வினைச்சொற்கள்

இ) இடைச்சொற்கள் ஈ) உரிச்சொற்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. பின்வருவனவற்றுள் இடையின மெய்யெழுத்துக் கூட்டம்

அ) ங்,ற்,ய்,ந்,ம்,ன் ஆ) ய்,ர்,ல்,வ்,ழ்,ள் இ) க்,வ்,ச்.ன்,ண்,ப் ஈ) ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பின்வருவனவற்றுள் பெரும்பாலும் அறநெறி இலக்கியங்களைக் கொண்டுள்ள பிரிவு

அ) பதினெண்கீழ்க்கணக்கு ஆ) பத்துப்பாட்டு

இ) எட்டுத்தொகை ஈ) ஐம்பெருங்காப்பியங்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. பைந்தமிழ் என்பதைப் பிரித்து எழுதினால் வருவது

அ) பை + தமிழ் ஆ) பைந் + தமிழ் இ) பசும் + தமிழ் ஈ) பசுமை + தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான குண்டலகேசி என்ற நூலை எழுதியவர்

அ) இளங்கோவடிகள் ஆ) திருத்தக்கதேவர் இ) சாத்தனார் ஈ) நாதகுத்தனார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. இயலும் இசையும் கலந்த நடிப்பாலும் பேச்சாலும் கருத்துகளைப் புலப்படுத்துவது

அ) நாடகத்தமிழ் ஆ) பைந்தமிழ் இ) இயற்றமிழ் ஈ) இசைத்தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. கடலும் கடல் சார்ந்த இடமும்

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. தமிழின் இனிமை கருதி அதற்கு வழங்கப்பட்ட சிறப்புப்பெயர்

அ) பைந்தமிழ் ஆ) செந்தமிழ் இ) தீந்தமிழ் ஈ) பசுந்தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. சீவகசிந்தாமணி என்ற காப்பியத்தை எழுதியவர்

அ) திருத்தக்கதேவர் ஆ) இளங்கோவடிகள்

இ) சீத்தலைச்சாத்தனார் ஈ) தொல்காப்பியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. எப்பொழுது நீர் கார் என்று பெயர் பெற்றது?

அ) மண்ணில் வீழ்ந்த போது ஆ) விண்ணில் இருந்தபோது

இ) ஆய்ச்சியர் கைக்கு வந்தபோது ஈ) உலகிற்கு வந்தபின்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. பெயரெச்சத்துக்கான எடுத்துக்காட்டு

அ) கட்டினான் ஆ) எழுதிய இ) எழுதி ஈ) கட்டுவித்தான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன.

அ) ஐந்திலக்கணம் ஆ) ஐம்பொறி இ) ஐம்பூதங்கள் ஈ) ஐம்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. கனிமொழி நடனம் ஆடுகின்றாள். இச் சொல்லியம் ________________

அ) கூட்டுச்சொல்லியம் ஆ) தனிச்சொல்லியம்

இ) கலப்புச்சொல்லியம் ஈ) கூட்டுக்கலப்புச்சொல்லியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. பாலைக் குடித்தான். இது ________________ வேற்றுமை.

அ) முதலாம் ஆ) இரண்டாம் இ) மூன்றாம் ஈ) நான்காம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. பவளம் அன்ன மேனி. இதில் இடம்பெற்றுள்ள இடைச்சொல் வகை

அ) வேற்றுமை உருபு ஆ) இடைநிலை இ) சாரியை ஈ) உவமை உருபு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. யானையின் இளையது கன்று என்பது போல் மீனின் இளையது

அ) குட்டி ஆ) குஞ்சு இ) கன்று ஈ) பிள்ளை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. ஆசுகவி என்பதன் பொருள்

அ) கவிபாடல் ஆ) வைதல் இ) வசைப்பாடல் ஈ) நகைச்சுவைப்பாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. 'வலம்படு வாய்வாள் ஏந்தி' எனத்தொடங்கும் பாடலை எழுதியவர்

அ) ஔவையார் ஆ) இளங்கோவடிகள் இ) கணியன் பூங்குன்றன் ஈ) மோசிகீரனார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. மூன்றாம் வேற்றுமை உருபு

அ) இல் ஆ) கு இ) ஐ ஈ) ஆல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. ஒல்லாந்தரையும் ஆங்கிலேயரையும் எதிர்த்துப் போராடிய வன்னித் தமிழ் மன்னன்

அ) கயிலாயவன்னியன் ஆ) சங்கிலியன் இ) பண்டாரவன்னியன் ஈ) எல்லாளன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. காளமேகப்புலவரின் இயற்பெயர்

அ) காத்தான் ஆ) காளமேகம் இ) அந்தணர் ஈ) வரதன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. முல்லைக்கு எவ்விதத்தில் உன் முகம் எழில் குறைவாயிற்று? என்று பாடலாசிரியர் யாரைக் கேட்கின்றார்

அ) செவ்வந்தியை ஆ) காட்டுமல்லிகையை இ) ஊராரை ஈ) உலகத்தாரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. உடைமைப்பொருளை உணர்த்தும் வேற்றுமை

அ) ஆறாம்வேற்றுமை ஆ) மூன்றாம்வேற்றுமை

இ) ஐந்தாம்வேற்றுமை ஈ) ஏழாம்வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. கரடி உறுமும். அதுபோல குதிரை

அ) முழங்கும் ஆ) பிளிறும் இ) கனைக்கும் ஈ) கத்தும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. மொழிக்கு இறுதியிலும் முதலிலும் வினாப்பொருளை உணர்த்தும் எழுத்து.

அ) யா ஆ) ஆ இ) ஏ ஈ) ஓ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஈழத்தின் தமிழ்ப்பிரதேசத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் அரசர்கள் ஆண்டார்கள். ஆதனால் தமிழ்மொழி அங்கு வளர்ந்தது. தமிழ்க்கலைகள் வளர்ந்தன. தமிழர் கலாசாரமும் பரவியது. ஈழத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையே நெடுங்காலத் தொடர்பு உண்டு. தமிழ் மொழித் தொடர்பும் தமிழ்க் கலாசாரத் தொடர்பும் அவற்றை இணைத்தன. அதனால் தமிழ்நாடு தாய்நாடு என்றும் ஈழம் சேய்நாடு என்றும் குறிப்பிடப்பட்டன. தமிழ்மொழி,
தமிழர்கலாசாரம், தமிழர்கலைகள் ஆகியன இரு நாட்டினரும் ஒரே இனம் என்பதைக் காட்டுகின்றன. நாட்டால் வேறுபட்டாலும் மொழி, கலை, கலாசாரத்தால் ஒன்றுபட்டவர்கள் ஒரே இனத்தவர்கள். உணவு, உடை, அன்றாடப் பழக்கவழக்கங்கள், விழுமியங்கள் போன்றவையும் இரு நாட்டுத் தமிழருக்கும் பொதுவானவை.
இசைக்கலை நடனக்கலை போன்றவற்றை ஈழத்தமிழர் பலர் தமிழ்நாட்டுக்குச் சென்று பயில்கின்றார்கள். தமிழ்மொழி, தமிழ்க்கலாசாரம் ஆகியன இரு நாட்டுத் தமிழரையும் இணைக்கின்ற பாலம் எனலாம்.

1. எக்கலைகளை ஈழத்தமிழர் தமிழ்நாட்டுக்குச் சென்று பயில்கின்றனர்?

______________________________

______________________________

2. இருநாட்டுத் தமிழர்களை இணைக்கின்ற பாலம் எது?

______________________________

______________________________

3. தாய்நாடு என்றும் சேய்நாடு என்றும் அழைக்கபட்ட நாடுகள் எவை?

______________________________

______________________________

4. எத்தனை ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்தின் தமிழ்ப்பகுதியை தமிழ் அரசர்கள் ஆண்டு வந்தார்கள்?

______________________________

______________________________

5. இரு நாட்டுத் தமிழருக்கும் பொதுவானவை எவை?

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

## 3) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. பண்டாரவன்னியனால் ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கோட்டைகளின் பெயர்களைத்தருக?

______________________________________________

______________________________________________

2. புறநானூற்றுப் பாடல்கள் தமிழரின் எத்தன்மைகளை விதந்து கூறுகின்றன?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

3. ''உன்பாட்டில் மலர்வாய் நீ! நான் என்பாட்டில் எழுதுகின்றேன்''? இது யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

______________________________________________

______________________________________________

4. அத்தமிக்கும் போதில் அரிசி வரும்! இக் கூற்று குறித்து நிற்பது யாது?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

5. பின்வரும் சொற்களுக்குப் பொருள் தருக.

அ) கேளிர்: ____________________ அ) ககனம்: ____________________

இ) பார்: ____________________ ஈ) தடந்தோள்: ____________________

(புள்ளிகள் 10)

**4 பாடலைப்படித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

பனைமரம் தென்னைமரம் வாழைமரம்
மக்கள் பழகும் பழக்கத்துக்கு மூணுமரம்(மூன்று மரம்)
பனை மரத்துக்கு ஒரு தரம் தண்ணீர்
பாய்ச்சிவிட்டால் போதும்
அதுதளை வளர்த்து தலையில் நுங்கினைத்
தந்து விளையாடும்.
தென்னைமரத்துக்கு தினசரி கொஞ்சம்
தீரத்தம் இட வேணும்.
அந்தத் தீர்த்தம் இளநீரைச் சேர்த்துக் கொண்டு
வரும், காத்திருக்க வேண்டும்.
வாழைமரத்துக்கு அடிக்கடி தண்ணீர் வார்த்த
பின்னாலடியோ
அது பூவைப் பழத்தை இலையைக் கொடுப்பது
போட்ட கடனடியோ
மக்களிலே பனை, தென்னை, வாழை என மூணு
வகைகள் உண்டு.
அவர் நன்றியிலும் செய்யும் நன்மையிலும் இந்த
மூணு விதங்கள் உண்டு. -----

கவிஞர் கண்ணதாசன்

1. எதன் அடிப்படையில் மக்களில் மூன்று விதங்கள் உண்டு எனக் கூறப்படுகின்றது?

______________________________

______________________________

2. தென்னை தான் குடித்த நீரை எவ்விதம் மாந்தருக்குத் திருப்பித்தருகின்றது?

______________________________

______________________________

3. அடிக்கடி தண்ணீர் வார்த்த பின் பயன் தரும மரம் எது?

______________________________

______________________________

4. வாழைமரம் எவற்றைத் தருவதாகப் பாடலில் கூறப்பட்டுள்ளது?

______________________________

______________________________

5. நுங்கினைத் தரும் மரம் எது?

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

## 5) இலக்கண / மொழியியல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

1. தரப்பட்டுள்ள வினைமுற்றுகளில் காணப்படும் இடைநிலைகளை எழுதுக.

உண்டான் : ____________________

பாடுகிறது : ____________________

வருவாள் : ____________________

2. பின்வரும் சொல்லியங்களில் தோன்றாஎழுவாய் தோன்றாச்செயப்படுபொருள் தோன்றாப்பயனிலை என்பவற்றை எழுதுக.

உணவு உண்டான் : ____________________

நன்றாக வரைந்தான் : ____________________

நேற்று நல்ல மழை : ____________________

3. தனிச் சொல்லியம் கூட்டுச் சொல்லியம் ஒவ்வொன்றிற்கும் எடுத்துக் காட்டுத் தருக.

____________________

____________________

4. வேற்றுமை உருபுகள் எத்தனை? இரண்டாம் வேற்றுமை உருபுக்கு எடுத்துக் காட்டுத் தருக.

____________________

____________________

____________________

5. சொல்லிய உறுப்புகள் எத்தனை? அவை ஒவ்வொன்றும் இடம்பெறும்வகையில் ஒரு சொல்லியம் தருக.

____________________

____________________

____________________

(புள்ளிகள் 15)

6. பந்தியை வாசித்து உமது வாழிட மொழியில் மாற்றி எழுதுக.

தமிழகத்தில் ஆங்கிலேயரின் ஆட்சியை எதிர்த்துப் போரிட்டவர்களுள் வீரபாண்டிய கட்டப்பொம்மனும் ஒருவன். கட்டப்பொம்மன் பெருவீரன். தமிழீழத்து வன்னி மன்னன் பண்டாரவன்னியனைப் போல இவனும் இறுதிவரை ஆங்கிலேயருக்குத் திறை செலுத்த மறுத்தான். அதனால் சினங்கொண்ட ஆங்கிலேயர் கடும்போர் தொடுத்தனர். இருந்தும் அவர்களால் கட்டபொம்மனை வெற்றிகொள்ள முடியவில்லை. கட்டப்பொம்மன் பண்டாரவன்னியனின் படைத் துணையுடன் ஆங்கிலேயப்படைகளை வெற்றிகொண்டான். இறுதியில் ஆங்கிலேயர் இரண்டகனான எட்டப்பன் துணையுடன் அவனைச் சிறைப்பிடித்தனர்.

(புள்ளிகள் 05)

**7. கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து, 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. காளமேகப் புலவர்
2. பண்டாரவன்னியன்
3. நீர் கண்ட கனவு

(புள்ளிகள் 20)